அறஞ் செய விரும்பு

உ
சிவமயம்

பத்துக் கட்டுரைகள்

வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்.

வெளியீடு :
பாலர் ஞானோதய சபை

அக்ஷய சித்திரை மீ 11உ
24 - 04 - 1986

உத்தமனாயிரு

234.P

170

ஓம்

திருச்சிற்றம்பலம்

பத்துக்கட்டுரைகள்

தனிய நூலகப் பிரிவு
மாதகல் நூலக சேவை
யாழ்ப்பாணம்

கட்டுரைத் தொகுப்பு

234.8

*

அக்ஷயஸ்ரீ பத்திரமீ 11ஏ

24 - 04 - 1986

விலை: ரூபா

நூன்முகம்

யான் மாணவனாய் இருக்கும்போது பல பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவை, பெரும்பாலும் ஈழநாடு, ஆத்மஜோதி, ஐக்கியதீபம் முதலாய பத்திரிகைகளில் பிரசுரமாயின. சைவ மக்களின் தனிப்பெரும் பத்திரிகையான இந்துசாதனத்தில் அனேகமான கட்டுரைகள் இடம்பெற்றன. இக்கட்டுரைகளை எழுதுவதற்கு நமக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்தவர் மேற்படி பத்திரிகையில் ஆசிரியராகக் கடமையாற்றிவருகின்ற சட்டத்தரணி நம. சிவப்பிரகாசம் அவர்களாகும். இக்கட்டுரைகள் எழுதப்பெற்று ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு மேலாகின்றது. இவற்றைச் சேகரித்து வைப்பது சிரமமான காரியம். இதனைக் கண்ணுற்ற மாணவ நண்பர்கள் புத்தகமாக வெளியிட விருப்பம் தெரிவித்தார்கள். இதன் காரணமாக அக்கட்டுரைகளில் முக்கியமான பத்துக் கட்டுரைகளைத் தொகுத்து நிரைப்படுத்தியுள்ளோம். கட்டுரைகள் வெவ்வேறு விடயங்களைக் கொண்டபோதிலும் சமயச்சார்புடையனவாகவே உள்ளன. இக்கட்டுரைகள் குறிப்பாக மாணவ உலகிற்கு உதவும் என்பது எமது நம்பிக்கை. அறிஞர் பெருமக்கள் இத்தொகுதியில் காணப்படும் குற்றங்களைக் களைந்து குணங்களை ஏற்பார்களாக.

இக்கட்டுரைகளை வாசித்து அணிந்துரை தந்துள்ள அம்மையார் ஸ்ரீமதி சகிதேவி கந்தையா B. A. (Lond.) அவர்களுக்கும்,

இத்தொகுதியை வெளியிடுவதற்கு முன்னின்று உழைத்தவரும், கட்டுரைகளில் ஏற்படும் பிழைகளைச் சரிபார்த்து உதவியவருமாகிய திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை அவர்களுக்கும்,

இந்நூலை அச்சேற்றி அழகுற நூல் வடிவாக்கித் தந்த சுன்னாகம் எஸ். பி. கே. என்டர்பிறைசஸ் ஸ்தாபனத்தாருக்கும்

எமது உளங்கனிந்த நன்றி உரித்தாகுக!

சிவஸ்ரீ
சி. கணேசலிங்கக் குருக்கள்
(பிரதமகுரு)

பாலர் ஞானோதய சபை,
காசி விநாயகர் தேவஸ்தானம்,
தெல்லிப்பழை. 5-3-86.

அணிந்துரை

அந்தணர் என்போர் அறவோர் என்ற கோட்பாடு, அறவோர் யாபேரும் அந்தணரே என நிலைப்பாடு அடையும் இன்றைய காலகட்டத்தில் நின்று சற்றுப் பின்னேக்கிப் பார்த்தால், தெல்லிமாநகரில் ஒரு அறுபது ஆண்டுகளுக்கு முன் அறவோராயும், அந்தணராயும் வாழ்ந்த ஒரு காசிப கோத்திர அந்தண பரம்பரை; அதன் அறிவியல் வாழ்க்கை, பெரு வட்டமாகப் பரந்த அதன் சமூகநல முகிழ்வு, எம் முன் வியாபித்துலிவாவதை நாம் உணரலாம். இப்பரம்பரையின் வழித் தோன்றல் பிரம்மஶ்ரீ கணேசலிங்கக் குருக்கள் அவர்கள். தன் குலத் திற்குரிய வேதமொழியைப் பயின்று கா சி விக்னவிநாயக கோவில் பிரதம குருக்களாக விளங்குவதுடன், தனது வாழ்க்கை மொழியாகிய தமிழை விரும்பிக்கற்று, பாண்டித்தியம் பெற்று பல பயன்தரும் கட்டுரைகளையும் படைத்துள்ளார். 1952ஆம் ஆண்டுக்கும் 62ஆம் ஆண்டுக்கும் உட்பட்ட காலகட்டத்தில் வெவ்வேறு உந்துதல்களால் இவர் பத்திரிகைகளில் வெளியிட்ட (10) கட்டுரைகளைத் தொகுத்து ஒரு சிறு ஏடாகப் பாலர் ஞானேதய சபை வெளியிட்டுள்ளது.

இக் கட்டுரைகளை மேற்பரப்பாகப் பார்த்தாலே, இலக்கண வித் தகர் கணேசையர், சிவத்தமிழ்க் காவலர் ஶ்ரீலஶ்ரீ ஆறுமுக நாவலர் திரிபாஷா பண்டிதர் முதலிய பெரியோரிடத்து இவருக்கு இருக்கும் ஈடுபாடு; சிவசின்னங்கள் கோட்பாடுகளில் இருக்கும் அபிமானம், அறம், கொல்லாமை முதலிய உயர்ந்த தத்துவங்களில் இருக்கும் பிடிப்பு; எமக்குத் தெற்றெனப் புலனாகும்- 'திருவள்ளுவர்' எனும் இவரது 10ஆவது கட்டுரை, சாதிசமயம் என்னும் வாழ்க்கை வளன் இலையாவற்றையும் கடந்த ஒரு பயினுமத்தையுடையது. அறவோர் சிந்தனை என்ற உயர் தத்துவத்தைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. இங்கு ஒரு அந்தணனிடம் அறச்சிந்தனைகளைப் பார்க்கக்கூடியதாக இருக்கிறது.

இவர் எடுத்துக்கொண்ட விடயங்களில் ஊடுருவிப்பாயும் கருத்துச் செறிவுகள் பத்திநெறிப் பண்புடையவராய், ஆத்மார்த்த சுத்தீகரணச் சிறப்பு உடையனவாய் அமைந்துள்ளன. செந்தமிழும், வடமொழிக் கலப்பற்று மிளிர்வது இவரது எழுத்துத் திறனை விளக்கிநிற்கிறது.

எமது, புதிய கண்ணோட்டத்தில் எம்முன் படைக்கும் குருகளது முயற்சிக்கு கைதரவேண்டியவர் மக்கள் காப்பாக நிற்பவன் பிரசன்ன வதனன், விக்ன விநாயகர்.

சகிதேவி கந்தையா
(B. A. Hons. Lond., Dip-in-Ed. Ceylon)

ஓம்

சமர்ப்பணம்

வித்துவசிரோன்மணி

பிரம்மஶ்ரீ சி. கணேசையர் அவர்கள்

தோற்றம்:
1 - 4 - 1878

மறைவு:
8 - 11 1958

குருநாதரின் பாதகமலங்கட்கு இச் சிறு நூலைச் சமர்ப்பணம் செய்கின்றேம்.

உ

சிவமயம்

வித்துவ சிரோன்மணி

ஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்

காசிபகோத்திர திலகரும், தமிழ்த்தாயின் அருந்தவப் புதல்வனும், இலக்கிய - இலக்கண மேதையும், சிறியேனது பேரனும், ஆசிரியருமாகிய வித்துவ சிரோன்மணி பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்களின் மறைவு தமிழ் உலகிற்கே பெருநட்டமாகும். அவரின் ஈமக்கிரியைகள் யாவும் அவருடைய பந்துக்களாலும் மாணவர்களாலும் சிறப்பாக நடாத்தப்பட்டன. பெரியார் அவர்கள் மறைந்த இத்தருணத்தில் அவரது பூர்வீக சரித்திரத்தை அன்னாரின் மாணவர்கள் வெளியிடுவார்கள் என்று எதிர்பார்க்கின்றேம். நாமும் நமக்கு இயன்றவரையில் மிகச் சுருக்கமாக, அவரது வரலாற்றையும் சேவையையும் பற்றிச் சிறிது நினைவு கூருவோமாக.

இற்றைக்கு எண்பத்துமூன்று ஆண்டுகளுக்குமுன், புன்னாலைக் கட்டுவன் என்ற ஊரிலே சின்னையர் என்பவருக்குப் புத்திரராகப் பிறந்தார் நமது ஆசிரியர். சிறுவயதில் உள்ளூர்ப் பள்ளிக்கூடத்திலே கல்வி பயின்றார். பின் இவரது திறமையைக் கண்ட தந்தையார் தமிழில் புலமை நிறைவுண்டாக்க விரும்பி நாவலரின் மருகராகிய பொன்னம்பலபிள்ளை அவர்களிடம் கல்வி பயில அனுப்பினர். இவரது நுண்ணறிவையும் தமிழார்வத்தையும் கண்ட பொன்னம்பலபிள்ளை அவர்கள் தொல்காப்பியம் முதலாய சங்க நூல்களையும், இன்னபிற தமிழ் நூல்களையும் ஐயந்திரிபறக் கற்பித்தார். (நமது) ஆசிரியர் அவர்களும் "ஒருமைக்கண் தான் கற்ற கல்வி யொருவற்கு எழுமையு மேமாப் புடைத்து" என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க பூர்வ தொடர்ச்சி காரணமாகச் சகல தமிழ் நூல்களிலும் பாண்டித்தியம் பெற்றார். ஈற்றில் ஆசிரியரே பிரமிக்கும்படியான புலமை மிக்க பண்டிதராஞர். அதன்மேல் சிலகாலம் ஆசிரியராகக் கடமையாற்றினர். பின்பு சுகயீனங் காரணமாக ஆசிரியத் தொழிலையும் விட்டு நூல் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். தொல்காப்பியத்திற்கு விரிவுரை எழுதினர். இதனை

'ஈழகேசரி' அதிபர் திரு. பொன்னையா அவர்கள் கணேசையர் பதிப்பாக வெளியிட்டார்கள். அக்காலத்தில் இவர்களுக்குப் பொற்கிளியும் வழங்கப்பட்டது.

பல அன்பர்களது வேண்டுகோட்கிணங்க "ஈழநாட்டுப் புலவர்" சரித்திரத்தை எழுதி வெளியிட்டார்கள். இன்னும் அநேக நூல்களுக்கு உரைகள் எழுதி வெளியிட்டார்கள். மருதடி விநாயகரைப்பற்றிய சிறு நூல் ஒன்று "மருதடி விநாயகர் பிரபந்தம்" என்னும் பெயருடன் எழுதினர்கள். இது அவ்வூர் திரு. த. குணரத்தினம்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டது. இறுதியில் சங்க இலக்கியமாகிய அகநானூற்றிற்கு விரிவுரை எழுதி, ஈழகேசரியில் வாரந்தோறும் ஒவ்வொரு பாட்டாக வெளியிட்டு வந்தார்கள். முதற்பகுதியாகிய "களிற்றியானை நிரை" 120 பாட்டுக்களும் எழுதி முற்றுப்பெற்றுள்ளன. இரண்டாவது 'மணிமிடை பவளம்' என்னும் பகுதியில் பத்துப் பாட்டுகளுக்கு மாத்திரமே விரிவுரை எழுதப்பட்டுள்ளது.

இற்றைக்கு 5 ஆண்டுகளுக்கு முன்னர்தான் மேற்படி ஆசிரியருடன் பழகும் வாய்ப்புச் சிறியேனுக்குக் கிட்டியது. பாடங்களையெல்லாம் மிகவும் அன்புடன் விளக்கமாகச் சொல்லித்தருவார். அவருக்கு வேண்டிய எழுத்து வேலைகள் யாவற்றையும் யானே எழுதிக்கொடுப்பேன். அவரும் என்னிடத்தில் மிகவும் அன்பு கொண்டிருந்தார். "கடைசி மாணவனுக வந்திருக்கிறீர்" என்று சொல்லுவார். கடைசி மாணவன் என்பதற்கே இரு பொருள் படச் சொல்லுவார். ஒன்று தனது கடைசிகாலத்து மாணவன். கடைசியாகத் தன்னிடம் பாடங்கற்கும் மாணவன். இவ்விதமாக நாள்தோறும் படிக்கும் நேரந்தவிர மற்றைய நேரங்களில் பல விநோதக் கதைகளையும் தனது மாணவ நண்பர்கள் செய்யும் உதவிகளையும் எடுத்துக் கூறுவார்கள்.

ஆசிரியர் அவர்களுக்கு, இடையிடையே நோய் வந்திராவிட்டால் இன்றும் எத்தனையோ தமிழ்த்தொண்டு செய்திருக்க முடியும். அவர்கள் தமது குலதெய்வமாகிய மருதடி விநாயகரிடத்தில் தீவிரபக்தி கொண்டிருந்தார்கள். அந்த ஆலயத்திற்கு அநேக திருப்பணிகள் நிறைவேற்றி யுள்ளார்கள். இவ்வாறெல்லாம் செய்த பெரியார் அவர்கள் எளிய தூய வாழ்க்கை வாழ்ந்து இறுதியில் விநாயகப் பெருமானின் திருவடியில் சேர்ந்தார்கள்.

[ஆ பெரியாரின் மறைவையொட்டி அஞ்ஞான்று எழுதப்பட்டது]

———

2 திரிபாஷா பண்டிதர்

இற்றைக்கு ஏறக்குறைய அறுபது ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த ஒரு பெரியாரைப்பற்றி இன்று நாம் சிந்திக்கவேண்டியது அவசிய மாகின்றது. தமிழ், சமக்கிருதம், ஆங்கிலம் ஆகிய மூப் பாஷைகளிலும் பாண்டித்தியமுடையவராய்த் "திரிபாஷா பண் டிதர்" என்ற பட்டத்துடன் தமிழ்த் தொண்டு புரிந்தவரும் சிறியேனது பேரனுமாகிய இப்பெரியாரது வாழ்க்கை வர லாறு வித்துவசிரோன்மணி பிரம்மஸ்ரீ. சி. கணேசையர் அவர் களால் எழுதப்பெற்ற ஈழநாட்டுப் புலவர் சரித்திரத்தில் இடம் பெறவில்லை. காரணம் அஞ்ஞான்று விளங்கியவர்கள் அதிற் கவனம் செலுத்தாமையே. தற்போது மேற்படி பெரியாரின் மாண வர்கள் சிலர் கூறியவற்றைக் கொண்டே இக்கட்டுரை எழுந்த தென்க.

பெரியாரின் தந்தையார் பெயர் இராமசுவாமி ஐயர், தாயார் பெயர் இலக்குமியம்மாள். இவர்களுக்கு ஐந்து ஆண்களும், ஐந்து பெண்களுமுளர். இவர்கள் யாவருக்கும் முதல்வராகப் பிறந்தவரே நமது பேரனார் முத்துக்குமாரசுவாமிஐயராவார். இவர்சிறுவயதிலே விவேகமுடையவராகவும், கல்வியிலே ஆர்வமுடையவராகவும் விளங்கினர், இப்பெரியார் ஆரம்பக் கல்வி கற்றபின், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரிடம் தமிழ், இலக்கண இலக்கியங்களை ஐயந்திரிபறக் கற்றார். நீர்வேலி—சங்கர ஐயரிடம் சமக்கிருதம் கற்றார். அத்துடன் பாதிரிமார் பள்ளிக்கூடத்தில் ஆங்கிலமும் கற்றுத் தேர்ச்சி பெற்றார்.

மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற இவர் புன்னாலைக் கட்டுவனில் தமிழ்ப்பேரறிஞராக விளங்கிய கதிர்காம ஐயர் என் பவருடைய மகளை விவாகஞ் செய்து இல்லறத்தை நல்லறமாக மேற்கொண்டார். அக்காலத்தில் இவர் ஆசிரியபணியை மேற் கொண்டு தமது இல்லத்திலேயே ஓர் வித்தியாசாலையை நடாத்தி வந்தார். அவ்வித்தியாசாலையில் கல்விகற்ற பலர் இன்றும் திறமை மிக்கவர்களாக விளங்குகின்றனர். பின்னர் தற்போது மகாஜனக் கல்லூரி இருக்கும் இடத்திற்கு அருகாமையில் ஒரு வித்தியா சாலையை நிறுவி நடத்திவந்தார். அவ்வித்தியாசாலை அரசினர் தன்கொடை பெருமையினாலே நிறுத்தப்பட்டது. எந்தையார் அவர்களும் ஒரு புத்திரியும் இவர்களின் பிள்ளைகள், புத்திரி பதி னொன்று வயதில் உயிர் நீத்து விட்டார். சமக்கிருதத்தில் பாண் டித்தியமுடைய இவர் ஆசாரிய அபிஷேகம் செய்யப் பெற்றுச் சமயச்சடங்குகள் செய்வதிலும் திறமைமிக்கவராய்த் திகழ்ந்தார்.

பேரனர் அவர்கள் ஆசிரியத் தொழிலுடன் அமையாது விரிவுரை நிகழ்த்துவதிலும் விற்பன்னராக விளங்கினர். பற்பல ஊர்கள்தோறும் சென்று விரிவுரைகள் நிகழ்த்தினர். அக்காலத்தில் நடைபெறும் சமயவாதம், இலக்கிய, இலக்கண ஆராய்ச்சிகள் முதலியவற்றிற்குச் சுன்னாகம்—குமாரசுவாமிப் புலவர் அவர்கள் இவரையும் உடன் அழைத்துச் செல்வார். அது மாத்திரமா? எதிர்ப் புறத்தாரின் கேள்விகளுக்கெல்லாம் புலவரவர்கள் இவர் மூலமாகவே விடையளிப்பது வழக்கம். ஒருமுறை (தவறணைகளை எடுக்கும் நோக்கமாக யாழ்ப்பாணத்திலே நடைபெற்ற சர்வ சமய மகாநாட்டிற்கு இவரே தலைமை வகிக்க வேண்டுமெனப் பலர் கேட்டதற்கிணங்கத் தலைமை வகித்து மும்மொழிகளிலும் உதாரணங்காட்டி விளக்கினர்கள். அன்று மகாநாட்டில் தவறணைகளை எடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இப்பெரியார் யாழ்ப்பாணத்திலே மாத்திரமன்றி கொழும்பு முதலாய நகரங்களுக்கும் சென்று விரிவுரைகள் நிகழ்த்தினர்கள். அத்துடன் மலேசியா முதலாய வெளியிடங்களுக்குச் சென்று பெரிய தேவஸ்தானங்களில் மஹாகும்பாபிஷேகங்கள் நிகழ்த்தியுள்ளார்கள்.

3 கதிர்காம யாத்திரை

ஈழநாட்டில் பூர்வீக ஸ்தலமாயும், தெய்வீகத் தன்மை பொருந்தியதாயும் திகழ்வது திருக்கதிர்காமமாகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த கதிர்காமத்தில் வள்ளிநாயகி, தெய்வயானை யம்மை சமேதராய் முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கிறார் என்பது கொள்கை. கதிர்காமத்தில் சிறு கட்டிடமே காணப்படும். வாசலில் திரையிடப்பட்டிருக்கிறது. வழிபடும் மக்கள் வெளிமண்டபத்திலே நின்று வழிபடுவார்கள். அங்கே பக்தர்கள் தம்மைச் சுத்தஞ் செய்து போவதற்கு மாணிக்க கங்கை அமைந்திருக்கிறது. வழி நடந்து களைத்து வரும் அடியார்கள் தாகந்தீர இக்கங்கையின் நீரை அள்ளிக் குடிப்பார்கள். இவைகளைவிட முத்துலிங்கசுவாமி கோயிலும், சிறிது தூரத்திற்கு அப்பால் மாணிக்கப்பிள்ளையார் கோவிலும், அநேக மடங்களும் அங்கே உண்டு.

ஆதிகாலத்திலே சைவர்கள் கதிர்காமநாதனின் உத்தரவின் படியே கதிர்காமயாத்திரை செய்தார்கள். உத்தரவின்றிச்சென்றால் பல இன்னல்கள் ஏற்படும். அக்காலத்திலே பிரயாண வசதிகளும்

மிகக்குறைவாக இருந்தன. ஆனால் இப்போது இவர்கள் தாம் நினைத்தபொழுதெல்லாம் கதிர்காம யாத்திரை செய்கிறார்கள். பிரயாணஞ் செய்வதற்குப் பாதைகள் திருத்தப்பட்டுள்ளன. அநேகர் மோட்டார்வண்டி மூலமும், பஸ்வண்டி மூலமும் கோயிலுக்குச் சமீபமாகவும் பிரயாணஞ் செய்கிறார்கள்.

கதிர்காமத்தில் ஓர் இயந்திரம் உள்ளது. அது ஆதிகாலத்தில் முத்துலிங்க சுவாமியால் ஆக்கப்பட்டதென்று கூறுகிறார்கள். திருவிழாக்காலத்தில் அதற்குப் பூசை செய்யும் கப்புரஹாமாள் யந்திரத்தை எடுத்துவந்து யானைமேல் வைத்து வீதி வலம் செய்வார்கள். அப்பொழுது பக்தர்கள் இரு மருங்கும் சூழ்ந்து 'அரோகரா' என்னும் நாமத்துடனும் கற்பூரதீபத்துடனும் வருவார்கள். அவர்கள் செய்யும் பூசைமுறைக்கும் எங்கள் ஏனைய சைவாலயங்களில் நடைபெறும் பூசைகளுக்கும் அதிகவித்தியாசமுண்டு. கப்புராளமார் கந்தசுவாமியாரைத் தங்கள் ''மைச்சினு'' என்றும் வள்ளிநாயகியாரை 'அக்கா' என்றும் அழைப்பார்கள்.

முருகப்பெருமானுடைய இருப்பிடமாகிய கதிர்காமத்திற்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் யாத்திரை செய்கிறார்கள். அவர்கள் எல்லோரும் கடவுளுடைய குழந்தைகள் என்ற மனப்பான்மையோடு செல்கிறார்கள். கடவுளின் நம்பிக்கையில்லாத நீசனுக்கும் கதிர்காம யாத்திரை செய்யும்போது 'தெய்வமுண்டென்பதோர் சித்தம்' உண்டாகின்றது. அவர்கள் தம்மை அறியாமலே 'முருகா, முருகா' என்ற நாமத்தைச் சொல்லுகிறார்கள். எல்லோரும் சகோதர பான்மையுடன் வணங்குவதைக் கதிர்காம க்ஷேத்திரத்திலேகாணலாம்.

கதிர்காமத்தை இலங்கையிலும், இந்தியாவிலும் உள்ள இந்துக்கள், பௌத்தர், இஸ்லாமியர் என்று சொல்லப்படும் பல மதத்தவர்களும் தங்கள் குலதெய்வமாகக் கருதி வழிபடுகின்றனர். கதிர்காமப்பெருமானை வணங்கும் சைவ மக்கள் அவரிடத்திலே மிகுந்த அன்பு பாராட்டுகிறார்கள். இன்னும் அநேக பெரியார்கள் கதிர்காம தலத்தைத் தரிசித்து அதன் மகிமையை சரித்திர மூலமாகவும், அருட்பாக்கள் மூலமாகவும் விளக்கியுள்ளார்கள். இப்படியாகப் பல உண்மைகளாலும் கதிர்காம யாத்திரை சைவமக்களுக்கு இன்றியமையாதது என்பது நன்கு புலப்படும்.

———

4 சைவ சாதனங்கள்

விபூதி, உருத்திராக்கம், பஞ்சாக்கரம் ஆகிய மூன்றும் சைவ சாதனங்கள் என்று சொல்லப்படும். சைவ சமயிகள் யாவரும் இச்சாதனங்களை அணிதல் வேண்டும். அங்ஙனம் அணியாதவர்கள் சைவசமயிகள் என்று சொல்லுவதற்கு அருகதையற்றவராவர். ஆதலால் இச்சாதனங்களின் மேன்மைகளைப் பற்றிச் சிறிது நோக்குவோம்.

விபூதி: பசுவின் சாணத்தை அக்கினியிலே சுடுவதால் உண்டாவதே விபூதியாகும். ஆன்மாக்களாகிய எங்களுடைய பாசங்கள் சிவபெருமானுடைய திருவருள் எனப்படும் ஞானநெருப்பினால் நீருக்கப்படுதலை விபூதி குறிக்கின்றது. விபூதியை உத்தூளணமாகவும், திரிபுண்டரமாகவும் அணியலாம். உத்தூளணமாவது பரவப் பூசுதல், திரிபுண்டரமாவது மூன்று குறியாகத் தரித்தல்; மூன்றுகுறியாகத் தரிக்கும்போது முதற்குறி பிரணவத்தின் ஆகாரத்தையும் கிரியாசத்தியையும் மகேஸ்வரனையும் குறிக்கின்றது. இரண்டாவது குறி உகரத்தையும் இச்சாசத்தியையும் சதாசிவனையும் குறிக்கின்றது. மூன்றுவது குறி மகரத்தையும் ஞானசத்தியையும் மகாதேவனையும் குறிக்கின்றது. இவ்விதமாக ஆகமங்களிலே விபூதியின் தன்மை விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் பாண்டியனுடைய வெப்பு நோயைத் தீர்த்தற்பொருட்டு 'மந்திரமாவது நீறு' எனத் தொடங்கும் பாடலை முதற்கொண்டு திருநீற்றுப் பதிகம் பாடி. பாண்டியனுடைய உடம்பில் விபூதியை அணியச் செய்ததும் அவனுடைய வெப்புநோய் நீங்கினதல்லவா? இது ஒன்றே திருநீற்றின் மேன்மையை விளக்குகின்றது. இது மாத்திரமா? பண்டைக்காலத்து வாழ்ந்த அடியார்கள் திருநீற்றைக் கடவுளாக மதித்து நடந்தார்கள். பெருமாக்கோதையார் வண்ணனை வணங்கியதும், ஏனாதிநாதர் தமது உயிரைவிட நேர்ந்ததும் திருநீற்றின் பெருமையை விளக்குகின்றனவல்லவா?

உருத்திராக்கம்: ஆன்மாக்கள்மீது சிவபெருமான் கொண்ட கருணையைக் குறிப்பது உருத்திராக்கம். (உருத்திரன் — சிவன்; அக்ஷம் - கண்) உருத்திராக்கம் தரிப்போர் மதுபானம், மாமிச போசனம் இல்லாதவராயும், கடவுள் பக்தியுள்ளவராயும் இருத்தல்வேண்டும். உருத்திராக்கம் சிரசில் இருபத்திரண்டு மணியும், கழுத்தில் முப்பது மணியும், கைகளிற் பன்னிரண்டு மணியுமாகத்

தரித்தல் வேண்டும். சிவாலய தரிசனம், சிவபூசை, சிவத்தியானம், சந்தியாவந்தனம் ஆதியன செய்யுங் காலங்களில் உருத்திராக்கமணி தரிப்பது உத்தமம்.

உருத்திராக்கத்தின் மேன்மையையும் அதனை அணியும் முறையையும் திருவாதவூரடிகள் புராணத்தில் பரமாசாரியருடைய வடிவத்தின் தன்மையைக் கடவுள்மாமுனிவர் கூறுமிடத்தில் மிக அழகாக எடுத்துரைக்கிறார். அப்பாடலைச் சற்று நோக்குவோம்.

'உருத்திர நற்றிரு மணியை யிலங்கு காதிலொண் டிரத்திற் கந்தரத்து லொளிகொண் மார்பிற் கரத்திலணிந் திலங்கு திருமுண்ட மல்கிக் கண்காந்த நன்னுதன் மேற்கவினச்சாத்தி.....'

எனவே உருத்திராக்கத்தின் மேன்மை அளவிடற்கரிது. இக்காலச் சைவமக்கள் உருத்திராக்கம் தரிப்பதற்கு வெட்கப்படுகின்றார்கள். தரிப்பவர்களைக் கண்டால் நகை செய்கிறார்கள். என்னே காலத்தின் செயல் கடவுளையும் அவரது மேன்மை பொருந்திய சாதனங்களையும் மறக்கச்செய்துவிட்டது. இவர் இவ்வாறு செய்வதனால் தம்மைத் தாமே கெடுக்கின்றார்கள். ஆண்டவனின் தண்டனைக்கு ஆளாகின்றார்கள்.

பஞ்சாக்கரம்: சைவசமயிகள் நியமமாகச் செபிக்கவேண்டிய சிவமூலமந்திரம் ஸ்ரீ பஞ்சாக்கரம் என்று சொல்லப்படும். மதுபானமும் மாமிசபோசனமும் இல்லாதவராய், ஆசாரமுடையவராய் உள்ளவர்கள் ஏழு வயதிலாவது அதற்கண்மையிலாவது குருவினிடத்தே சிவதீக்கை பெற்றுச் சிவமூல மந்திரத்தைச் செபித்தல் வேண்டும், தீக்கை பெறுதவன் ஸ்ரீ பஞ்சாக்கரம் செபிப்பதற்கு அருகதையற்றவன். எனவே சைவசமயிகள் அனைவரும் தீக்கை பெறுதல் அவசியம். தீக்கை பெற்றவர்கள் பஞ்சாங்கரத்தின் மேன்மைகளைப்பற்றிச் சைவசித்தாந்த நூல்களில் பரக்கக் காணலாம். சிவமூல மந்திரத்தின் மேன்மைகளை விளக்கித் திருஞான சம்பந்த சுவாமிகள் 'பஞ்சாக்கரப் பதிகம்' என்னும் பதிகத்தைப் பாடியுள்ளார்கள். அதில் முதலாவதாக வரும் பாடலைச் சற்று நோக்குவோம்.

''காத லாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பதும்
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவதும்
நாத நாம நமச்சி வாயவே.''

ஆகவே சைவசாதனங்களின் மேன்மைகள் சைவ ஆன்மாக்களிலும் சித்தாந்த சாத்திரங்களிலும் வெள்ளிடைமலைபோல் விரி

வாகக் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றைச் சைவமக்களாகிய நாமனைவோரும் கற்று, அவற்றிற் கூறிய முறைப்படி சமயசின் னங்களை அணிந்து, மேன்மைகொள் சைவநீதி உலகமெல்லாம் விளங்கும்வண்ணம், இறைவனிடத்தே பக்திவைத்து இறைவனின் இறவா நெறிக்கண் நின்றுய்வோமாக,

"வெந்தநீ றருங்கலம் விரதிகட் கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக் கருங்கலம் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே."

—திருநாவுக்கரசர் பஞ்சாக்ஷரப் பதிகம்.

———

5 பத்திவைராக்கியம்

மனம், மொழி, மெய் என்னும் மூன்றும் ஒருமித்து ஆண்டவ னிடத்தே பக்தி செலுத்துவதே வைராக்கியமான பக்தியாகும். ஆண்டவனே உண்மைப்பொருளென உணர்ந்து மனத்தால் நினைத் தலும், மொழியாற் பாராட்டலும், மெய்யால் வணங்கலும் ஆகியவை பக்தியின் பாற்படும். உலக வாழ்வினி நிலையாமையை உணர்ந்து வெறுத்தல் வைராக்கியமெனப்படும். இறைவன் சந்நிதியில் உள்ளம் பொய் தவிர்ந்து தம்மை இறைவனுக்கு அர்ப்பணஞ் செய்தார் மாணிக்கவாசகப் பெருந்தகை. அன்னா ரின் திருச்சதகப் பாடல்களில் பக்திப்பிரவாகம் கரைபுரண்டோடு வதைக் காணலாம். ஆகவே முதற்பாடலைச் சற்று நோக்கு வோம்.

"மெய்தான் அரும்பி விதுர்விதுர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்மி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்றுங்
கைதான் நெகிழவிடே னுடையா யென்னைக் கண்டுகொள்ளே."

மாணிக்கவாசகரைப்போன்று தாயுமான சுவாமிகளும் பக்தி வைராக்கியத்தில் திளைத்தவர். பேரானந்தப் பெருங் கடலுள் மூழ்கியவர். அவர் மனத்திற்குப் புத்தி புகட்டுகிறார். மனமே உனக்கு இயற்கையாகவுள்ள தீமைகள் எல்லாவற்றையும் ஒரு புறத்தேவை. உலகெங்கும் சுற்றி அலைவதைத் தவிர். கெட்டுப் போகாதே. நீ கெடுவாயானால் உன்னைத் திருவருளென்னும் ஆயுதங்கொண்டு திருத்துவேன். இஃது ஒருவகை வைராக்கியம். அப்பாடல் பின்வருமாறு:

"வாராய் நெஞ்சேயுன்றன் மார்க்கம் யாவையும் வைத்துக்கட்டிங்
காரா யடிக்கடி சுற்றுகின் ருயுன் னவலவ மதிக்
கோராயிரம் புத்தி சொன்னலு மோர்கிலையோ கெடுவாய்
பாராயுனைக் கொல்லுவேன் வெல்லுவேவருட் பாங்குகொண்டே."

பத்தியென்றுல் அன்பு எனப் பொருள்படும். உலகில் உள்ள உயிர்கள் யாவும் தமக்குத் தொடர்புடையார் மாட்டு அன்பு செலுத்துவதை நாம் காண்கின்றேம். தாய்க்குச் சேயிடத்தே அன்பு. பறவைகளுக்குக் குஞ்சுகளிடத்தே அன்பு. மிருகங்களுக்கு கன்றுகள் குட்டிகளிடத்தே அன்பு. ஆனல் இவையெல்லாம் தவிர்த்துக் கடவுளிடத்தே அன்பு செலுத்துவதே பக்தியாகும். அதிலும் உறுதியான, என்றும் அசைக்கமுடியாத வைராக்கிய பக்தி எவனெருவனிடத்தில் உண்டோ அவனே உயர்ந்தவன். அவனே தேவன். அவனே கடவுளின் கருணையைப் பெறும் பாக்கியவான்.

மனத்தில் உறுதி பூண்டு பக்தி வைராக்கியத்தில் நிலைத்தவர்கள் தம்மையொரு பொருளென மதிக்கமாட்டார்கள். அவர்களிடத்து யான் எனது என்னும் அகங்கார மமகாரங்கள் இராது. எல்லாம் இறைவன் செயல் என்னும் கொள்கையுடையவர்களாய் விளங்குவார்கள். "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்னும் ஆப்தமொழிக்கு இலக்காக வாழ்வார்கள். அத்துடன் அவர்களிடத்து எவ்வளவு பக்குவ முயற்சி இருந்த போதிலும் அதை ஒரு பொருட்டாகக் கருதமாட்டார்கள். தம்மைக் கீழ்ப்படுத்திக் கூறுவதே அவர்களது இயல்பு. ஏன் மணிவாசப்பெருந்தகை கூறுவதைச் சிறிது கவனிப்பாம். "சுவாமீ! நாடகத்தில் நடிப்போர் வேஷம் போடுதல்போல் யானும் சிவனடியார்போல் வேஷம் போட்டு நடிக்கின்றேன். அத்துடன் வீட்டின்பத்தைப் பெறுவதற்கும் விரைகின்றேன். ஆகவே என் நடிப்பைப் பொருட்படுத்தாது ஆட்கொள்ளவேண்டும்.,'

"நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நாடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகசீர் மணிக்குன்றே இடையரு வன்புணக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள் எம்உடையானே."

இதுவே வைராக்கியமான வேண்டுகோள். இவ்வித வேண்டுகோளை இறைவனல் மறுக்கமுடியாது.

———

6 நாவலர் நற்பணி

உலகிலுள்ள மக்களிடையே பல்வேறு மொழிகள் பேசப்படுகின்றன. அவைகளுள் தலைசிறந்து விளங்குவது தமிழ். அத்தகைய இனிமை நிறைந்த தமிழின் பெருமையை ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்குங்காணோம்'' என்று காலம்கடந்த பாரதியார் கூறியிருக்கின்றார். முருகப்பெருமானால் வளர்க்கப்பெற்று, அகத்தியர் பெருமானால் காக்கப்பெற்று, சங்கப் புலவர்களால் போற்றப்பெற்று என்றும் அழியாது இறைமொழியாய் விளங்குவது தமிழ். இத்தகைய தமிழ் இருந்த இடமும் தெரியாமல் மறையுந் தன்மையதாயிற்று. புத்துயிர்கொண்டு வீறுடன் தமிழைத் தலைநிமிரச் செய்த தொண்டு நற்றமிழ்க் குருசிலாகிய நமது நாவலர் பெருந்தகை அவர்களுக்கே உண்டு. நாவலர் அவர்கள் பிறந்திராவிடில் தமிழ் மறைந்துவிடுவது நிச்சயம். எனவே தமிழைப் பாதுகாத்த நாவலரின் பணியைச் சிறிது ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமென்க.

நாவலர் காலத்துக்கு முன் முக்கியமாகத் தமிழ் நூல்கள் யாவும் செய்யுள் வடிவாகவேயிருந்தன. இதனை நாவலர்பெருமான் கண்டார்! அருகிப்போய் மறைந்துபோய் இலைமறை காய்போல் இருந்த எத்தனையோ சங்க நூல்களையும், சமய நூல்களையும், இன்னபிற நூல்களையும் பிழையில்லாது பரிசோதித்து அழகுற அச்சேற்றினார்.

தமிழ் வசனநடை எழுதுவதில் ஆறுமுகநாவலருக்கு நிகரானவர்கள் ஒருவரும் இல்லையென்று கூறின் அது மிகையாகாது.

அவரே வசனநடை எழுதப் பயிற்றினார். இதனால் மக்கள் சுகமாகப் படிக்க முடிந்தது. இவைகளை நாம் ஆராயுமிடத்து நாவலருக்கு முன் இருந்த மக்கள் தமிழைப் படிப்பதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்கள் என்பது வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது.

சமயப் போர்வீரன்: சமயச் சண்டை காரணமாக நாவலர் பெருமான் தமிழுக்குச் செய்த பணி அளவிடற்கரிது. அவர் காலத்துக்குமுன் சைவக்கோயில்களில் புராணம் படிக்கும்போது தமிழில் விரிவுரை கூறுதலேயன்றிப் புறம்பான பொருளைப்பற்றி தமிழில் விரிவுரை நிகழ்த்தும் பழக்கம் தமிழ் மக்களிடையே தமிழ்நாட்டிலே இருக்கவில்லை. கிறீஸ்த மக்களுக்குப் பாதிரிமார் செய்துவந்த

ஆங்கில விரிவுரைகளைப் போல, சைவத்தின் உண்மைகளை மக்கள் அறிந்துகொள்ளுதற்பொருட்டும் கிறீஸ்தமதத்தைச் சைவர்கள்பின் பற்றுமல் இருப்பதற்கும், சைவத்தின் மேன்மைகளைப் பற்றியும், சைவஆகமங்களைப் பற்றியும் சுற்றேரும் கல்லாதோரும் அறிந்து கொள்ளும்படியாக முதன்முதலாக யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரன் கோவிலிலேவிரிவுரை நிகழ்த்தத் தொடங்கினர். இதன்பின் பலப் பல இடங்களிலும் விரிவுரை நிகழ்த்தினர். இவரது தமிழ்ப் பணி யையும், நா வன்மையையும் கண்டு வியந்து திருவாவடுதுறை ஆதீனத்து மகாசந்நிதானம் அவர்கள் இவருக்கு "நாவலர்" என் னும் பட்டப்பெயரைச் சூட்டினர்கள்.

தமிழ்த்தவமணி; நாவலர் பெருமானின் தமிழை நன்கு கற்று, அதன் சுவையை அறிந்த யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள் இவ்வாறு புகழ்கின்றார். செந்தமிழ் உய்ய வந்தவர் என் கின்றார். தமிழ்ப்பணிதனை மணந்த தவமணிச்சைவன் என்கிறார். இவர் பாடிய பாடல்களை இனிச் சற்றுப் படித்து இன்புறுவேம்.

"செந்தமி ழுய்ய திருநெறி விளங்க வந்தோன்
அத்தமில் கல்வி கேள்வி யாழியைக் கடைந்து நாளும்
தந்தனன் அமுத நூல்கள் சாவிலா வரத்தைப் பெற்ற
நந்தமி ளுள்ள மட்டு நாவலன் வாழ்கமாதோ"

என்றும்,

"தமிழினைப் புதுக்க வந்த தத்துவப் புலவ னென்தோ!
தமிழ்ப்பணி தனைமணந்த தவமணிச் சைவனென்கோ
தமிழிசை பரவலந்த தாரகக் குழலே யென்கோ
அமிழ்தினு மினிய சொல்லான் அறுமுக நாவலோனே"

என்று கூறி ஆனந்தப்படுகிறார்.

அன்னியமொழி வல்லுநர்: ஆறுமுகநாவலர் அவர்கள் ஆங்கி லமும் நன்கு கற்றவர். அவர் விரும்பினால் உயர்தர உத்தியோகங் களும் வகித்திருக்கலாம். ஆனால் அவர் அவைகளை விரும்பவில்லை. தமிழ்மொழிற்கும் சைவமதத்திற்கும் பணியாற்றுவதே தம் கட னாகக் கொண்டார். இவைகளின்பொருட்டு யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் "சைவப்பிரகாச வித்தியாசாலை" என்னும் நாமத் துடன் இரு வித்தியாசாலைகளை நிறுவினர். அங்கே தகுந்த தமிழ்ப் பண்டிதர்களைப் பாடங் சுற்பிக்கும்பொருட்டு அமர்த்தினர். இது மாத்திரமா? ஏழை மாணவர்களுக்கு இலவசமாகப் பாடங் கற் பித்தார். இவரது வித்தியாசாலைகளில் முதன்மையுடன் தேறிய மாணவர்கள் வித்துவசிரோன்மணி த. ச. பொன்னம்பலம்பிள்ளை,

த. கைலாசபிள்ளை, உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை, நடராசையர், சுவாமிநாதையர், சதாசிவம்பிள்ளை ஆதியோராகும்.

"வசனநடை, கைவந்த வள்ளலார்" என்னும் பெரும்புகழ் பெற்ற நாவலர் பெருமான் தமிழ்ப்பணியே முதற்பணியாகக் கொண்டார். தமிழ் வளர்ச்சியின் பொருட்டும் சமய வளர்ச்சியின் பொருட்டும் பல நூல்களை இயற்றினார். கந்தபுராணம், நன்னூற்காண்டிகையுரை, திருவிளையாடற் புராணம் ஆதியன இவரால் பரிசோதித்து வெளியிடப்பட்டன. இவர் கிறிஸ்தவ குருமாரின்வேண்டுகோளுக்கிணங்கி, கிறீஸ்த நூலாகிய பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்தார்.

இவ்வாறெல்லாம் தமிழுக்கும் சைவத்திற்கும் அளப்பரிய பணிகள் ஆற்றிய நாவலர் பெருந்தகை, கலியப்தம் 4924க்குள் சாலிவாகன சகாப்தம் 1745க்கும் சமமாகிய சித்திரபானு வருசம் மார்கழி மாதம் 5ஆந் திகதி புதன்கிழமை இரவு அவிட்டநட்சத்திரத்தில் பூமியில் ஜெனனமாகி மேலே குறிப்பிட்டவாறு பணி செய்து, பிரமாதி வருடம் கார்த்திகை மாதம் 21ஆந் திகதி (5-12-1879) இறைவன் திருவடியை அடைந்தார்,

(30-5-52)

7 அறத்தின் சிறப்பு

"அறஞ் செய விரும்பு" இது ஔவைப்பிராட்டியின் அறிவுரை. மக்களாய்ப் பிறந்த நாமெல்லாம் இம்மையிலும் மறுமையிலும் மேன்மைபெற்று வாழவேண்டுமானால் அறத்தையே செய்ய வேண்டும். தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரும் முதலில் அறத்தையே எடுத்துக் கூறியுள்ளார். நாம் முற்பிறவியிலே செய்த அறத்தின் பயனாகவே மனித சரீரம் நமக்குக் கிடைத்திருக்கிறது. இப் பிறப்பிலேயும் அறத்தைச் செய்வோமானால் மறுபிறப்பில் பேரின்பத்தைப் பெறமுடியும்.

அறத்தைச் செய்வதற்குக் கால வரையறையில்லை. இளமையிற் செய்யக்கூடாது முதுமையிற் செய்யவேண்டும் என்ற நியதியில்லை. எப்பொழுதும் எந்நேரத்திலும் செய்யலாம். இந்த நிலையில்லாத உடம்பு இருக்கும்போதே நிலையான அறத்தைச் செய்து பொன்றாத் துணையைத் தேடிக்கொள்ள வேண்டும். இதனையே வள்ளுவப்பெருந்தகை "அன்றறிவா மென்ன தறஞ்செய்க மற்றது பொன்றுங்காற் பொன்றாத் துணை" என்றார்.

அறஞ் செய்வோரிடத்து நான்கு குற்றங்கள் இருக்கக் கூடா தென்கிறார் திருவள்ளுவர். அஃதாவது பொருமை, அவா, வெகுளி, இன்னுச்சொல் இந்நான்கையும் களைந்தவனே அறஞ்செய்யும் ஆற்றலுடையவனுகும் என்கின்றார், இக்குற்றங்களை உடையோர் செய்யும் அறம் அறமாகமாட்டாது. இதுவே தெய்வப் புலவரின் தெளிவுரை. அக்குறட்பாவைச் சிறிது நோக்குவாம்.

"அழுக்கா றவா வெகுளி யின்னுச்சொன் னன்கு
மிழுக்கா வியன்ற தறம்."

என்கின்றார்.

பண்டைக்காலத்தில் வாழ்ந்த தமிழ் அரசர்கள் பல அறங்களை யெல்லாஞ் செய்து வந்தார்கள். தேவாலயங்களைக் கட்டுதல், அவற்றைப் பரிபாலித்தல், மடங்கள், தண்ணீர்ப் பந்தல்கள், தரும சத்திரங்கள் முதலானவற்றை அமைத்து நடத்துதல் இன்னேரன்ன பலவாம். இன்றும் நமது தாய்நாடான பாரத நாட்டிலே ஆலயங்கள் தோறும் ஆதீனங்கள் பல அறப்பணிகளை யெல்லாம் செய்துவருதல் கண்கூடாகக் காணக்கூடியதாக விருக் கின்றது.

எத்தனையோ பணம்படைத்த பிரபுக்கள் தாமும் அநுபவி யாது பணத்தை வீணுக்குகிறார்கள். இதனைக்கண்ணுற்ற ஔவைப் பிராட்டியார் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார். அவரது அறி வுரையைக் கேட்டபின்னுவது அறஞ்செய்யாது விடுவோமானுல் அதைப்போல் அறிவீனம் வேறில்லை. பாடலை சிறிது நோக்குவாம்.

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைக்கும்
கேடுகெட்ட மானுடரே கேளுங்கள்—கூடுவிட்டுங்
காலிதான் போனபின் பாரே அனுபவிப்பார்
பாலிகாள் அந்தப் பணம்."

இறைவனே தருமக்கடலாக விளங்குகின்றன். அவனது தாளாகிய புணையைச் சேர்வதற்கு அறஞ் செய்யவேண்டும். அறஞ் செய்யாது பிறவியாகிய கடலை நீந்திக் கரைசேர முடியாது.

"அறவாழி அந்தணன் ருள் சேர்ந்தார் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது."

என்றார் தெய்வப்புலவர். பொதுவாக நோக்கும்போது பிறவிப் பயனைத் தருவதும், அழியாப் பேரின்பத்தைத் தருவதும் அறமே யாகும். இத்தகைய மேலான அறத்தை நாடோறுஞ் செய்ய

வேண்டும். அறத்தின் தன்மைகளையும் அதன் சிறப்புகளையும் சிவஞான சித்தியாரின் ஒரு பாடல் சுருங்கக்கூறி விளங்க வைக்கின்றது, அதாவது,

"ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம்
உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம் தானங்கள்
வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம்
அறிவோடு அர்ச்சித்தல் ஆதி
அழுக்கிலா அறங்க ளாஞல்
இரங்குவான் பணி யறங்கள்."

—(சிவஞானசித்தியார். சு. 11.23)

---

8 உயிர் நீக்கும் வினை

(உரைக்கொணாப் பாதகம்.)

"கொன்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்."

என்பது திருவள்ளுவப் பெருந்தகையின் திருவாக்கு.

பஞ்சமா பாதகங்களுள்ளே மிகக் கொடிய பாதகம் கொலையாகும். இக்கொலையைச் செய்வதற்குக் காரணமாயுள்ளது மாமிச போசனமாகும். மக்கள் மாமிச போசனத்தை அருந்துவது காரணமாகவே உயிர்க் கொலையும் தோன்றியுள்ளது. மாமிச போசனத்தை மக்கள் செய்யாது விடுவார்களேயானால் உயிர்க் கொலை செய்தலும் உலகில் நடைபெறமாட்டாது.

எல்லாப் பிராணிகளையும் உண்டாக்கினவர் கடவுளல்லவா? அவருக்கும் பிராணிகள் யாவும் பிள்ளைகளல்லவா இருக்கின்றன. பரம பிதாவாகிய பரம்பொருளுக்குச் சீவன்களைக் கொலை செய்தல் சம்மதமாயிருக்குமா? அவராலே கொலைப் பாதகங்களுக்கு அளவிறந்த தண்டனை கிடைக்குமல்லவா? அன்பர்களே! இது எவ்வளவு அறியாமை! நாம் மாமிச போசனம் அருந்துவதனால் இறைவன் படைத்த உயிர்களைக் கொலை செய்யவேண்டி நேரிடுகின்றன. இத்தகைய கொலைப் பாதகச்செயலை நீக்குவோமானால்

பல்லாயிரக்கணக்கான சீவன்கள் உயிருடன் வாழவைத்த பாக்கியத்தைச் செய்தவர்களாவோம். "எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணியிரங்குநின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே" என்னுந் தாயுமான சுவாமிகளின் கருணை வாக்கின்படி ஒழுக விரும்புவோமானால் ஆண்டவன் திருவருள் தேடாமலிருக்கத் தேடிவரும்.

எமக்கு ஓர் எறும்பு கடித்தால், அல்லது வேறு கொப்புளம் ஆதியன வந்தால் நாம் எவ்வளவு துடிதுடிக்கின்றோம். அங்ஙனம் துன்பப்படுவதை நாம் விரும்பவில்லை. அதுபோலவே ஆடு, கோழி முதலாம் சீவன்களும் துன்பப்படுவதை அற்பமேனும் விரும்பமாட்டா. அவ்வாறு துன்பத்தைச் சகியாத பிராணிகள் கொலை செய்யப்படுவதைச் சகிக்குமா? கொலை செய்யும்போது அவைகள் படும் துன்பமோ அளவிடற்கரியது. அங்ஙனம் அவைகள் துன்பப்படுவதையும் அவைகளைக் கொலைசெய்வதனால் அடையும் பாவத்தையும் எடுத்துரைக்கும் பாடல்கள் மிகத்தெளிவாக எடுத்து இயம்புகின்றன.

"அம்மா வெனவலற வாருயிரைக் கொன்றருந்தி
இம்மா னுடரெல்லா மின்புற் றிருக்கின்றார்
அம்மா வெனுஞ்சத்தங் கேட்டன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நிரயமென்றுற் புசித்தவர்க்கென் சொல்லுவதோ"

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற் காணபிற
தின்னுயிர் நீக்கும் வினை."

—திருக்குறள்

மக்களாகிய நமக்கு எமது சரீரத்தினை மக்கள் என்று சொல்லுவதா? அல்லது மாக்கள் என்று சொல்லுவதா?

"கொல்லா பிரதங் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே."

என்பது தாயுமான சுவாமிகளின் தனிப்பெருவாக்கு. இதற்கு நேர்மாறாகச் சைவமக்கள் குவலயமெல்லாம் உயிர்க்கொலையே செய்கின்றார்கள். ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் எனக்கேட்டால் ஆண்டவனுக்குப் பலி செய்கிறோம் என்கிறார்கள். ஆண்டவனுக்குப் பலிசெய்ய வேண்டியவைகள் நமது உடல், பொருள், ஆவி என்னும் மூன்றுமேயாகும். இதைவிட்டு உயிர்க்கொலை செய்வோமானால் ஆண்டவனின் அளவிறந்த நரக தண்டனைக்கு ஆளாவோம். எமக்கு எவ்வகையான சாந்தியும் கிடைக்கமாட்டாது.

இதனைப் பின்வரும் பாடல் தெளிவுறக் கூறுகின்றது.

"கங்கையிற் படித்திட்டாலுங் கடவுளைப் பூசித்தாலும்
மங்குல்போற் கோடிதானம் வள்ளலாம் வளங்கினாலும்
சங்கையில் லாதஞான தத்துவ முணர்ந்திட்டாலும்
பொங்குறு புலால்புசிப்போன் போய்நர கடைவனன்றே"

(—பசு பதி பாச விளக்கம்.)

எங்கள் சைவ ஆகமங்கள் எல்லாம் உயிர்க்கொலை செய்தல் மாமிசம் புசித்தல் ஆதியன மகா பாதகங்கள் என்று கூறுகின்றன. இவைகளை நாம் சிந்தியாது நாடு முன்னேற்றம் அடைந்து வரும் இக்காலத்திலும் சைவ ஆலயங்களில் ஆயிரக்கணக்கான ஆடு, கோழிகள் பலியிடுவதைக் கண்டும் வாளாவிருப்பது முறையல்ல. எனவே சைவப்பெரியார்கள் அறிஞர் பெருமக்கள் இவ்விஷயத்தில் முன்னின்று மக்களுக்கு நல்லறிவைப் புகட்டி, இம் மூடக் கொள்கையை நாட்டில் இல்லாது செய்யவேண்டும். சைவமக்கள் அனைவரும் மாமிசம் அருந்துவதை நிறுத்தவேண்டும். அங்ஙனம் மாமிசம் புசியாது விடுவார்களேயானால் உயிர்க்கொலையும் நாட்டில் இல்லாது நீங்கிவிடும். எல்லாச் சீவன்களும் அன்பாகவும் சுகமாகவும் வாழும்,

"மேன்மைகொள் சைவநீதி உலகமெல்லாம் விளங்கும்".

---

9 அடியார் பெருமை

ஆணவம், மாயை, கன்மம் என்றும் மும்மலங்களினின்றும் நீங்கி மற்றும் உயிர்களுக்குத் தீங்கு செய்யாது கடவுளையே சதாசிந்தனையுடன் இருப்பவர்களே அடியார் என்று சொல்லப் படுவர். அவர்கள் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு அவரருளைக் கொண்டு தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்களைப் பாடியுள்ளார்கள். "அடியாற்கெளியன் பிற்றம்பலவன்" என்ற வாக்கியத்தின் உண்மைப்படி கடவுளும் அடியார்களுக்கு நீக்கமறநின்று அருள் புரிந்துள்ளார்.

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே" என்ற சொல்லின் பொருள்தான் என்னே? சற்சனர் சங்கமாகிய அடியார் குழுவினால் மக்களாகிய நாம் பெறும் பயன் அறவிறந்தன. அடியார்களே கடவுளையும் அவரருளை நாம் பெறும் வழிகளையும் எடுத்துக்காட்டியுள்ளார்கள். சந்தனமரத்தைச் சார்ந்த வேப்பமரமும் அதேவாசனை கொடுப்பதுபோல அடியார்கூட்டத்தை நாமும்

அணுகுவோமானால் எமக்கும் தெய்வீகஅருள் கிடைக்கும். மணிவாசகப்பெருந்தகையார் "உன்னடியார் நடுவுளிருக்கும் அருளைப் புரியாய்..." என்று வேண்டுகின்றார். கடவுள் அடியார்கள் மூலம் அற்புதங்கள் செய்துள்ளார் என்பதையும் அடியார்களுக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்புகளையும் "பெரியபுராணம்" எமக்குக் கூறுமற் கூறுகின்றது.

அடியார்கள் எம்மனோரைப்போன்று கடவுளை வணங்குவதில்லை. அவர்கள் மெய்ம்மறந்து மனம் புழுங்கக் கண்ணீர்பெருக வணங்குவார்கள். ஆலயங்கள்தோறும் சென்று திருத்தொண்டு செய்வதும் திருநீறு முதலிய சாதனங்களை அணிவதும் தவறுது செய்வார்கள். இச்சாதனங்களை அணிந்தவர்களைக் கண்டால் சிவமாக நினைத்து வணங்குவார்கள். அவர்களுட்சிலர் புஷ்பங்களை இட்டும் சிலர் பாமாலைகள் பாடியும் பலவிதமாக வணங்குவார்கள்.

உலகத்திலே எங்கள் தாயாகிய சைவசமயம் உண்மைச்சமயம் என்றும், அதன்வழி நடப்பவர்களே சைவசமயிகள் என்றும் சைவசமயிகளுக்கு அவசியம் வேண்டற்பாலது விபூதி, உருத்திராக்கம், பஞ்சாக்ஷரம் ஆகிய சாதனங்களேயென்றும் இவைகளை அணிந்து சமயமுறைப்படி நடந்தால் திருவருள் கிடைக்குமென்றும், தெற்றெனப்புலப்படும் வண்ணம் விளங்க வைத்தவர்கள் அடியார்கள் என்று கூறுதல் மிகையாகாது. இத்தகைய அறுபத்துமூன்று அடியார்களுள் மிகச்சிறந்த திருஞானசம்பந்தர் பாண்டியனுடைய வெப்புநோய் நீங்கும்வண்ணம் "மந்திரமாவது நீறு" என்று தொடங்கித் திருநீற்றுப்பதிகம் பாடியதும் அவனுடைய வெப்புநோய் நீங்கினதல்லவா? இதனாலேயே அடியார் பெருமை எமக்குப் புலப்படும்.

தொகுத்துக்கூறின் அடியார்களாலேயே சைவசமயம் மேலோங்கியது எனலாம். அடியார்கள் கடவுளுடைய திருவருளாகிய செல்வத்தையே விரும்புபவர்களாதலால் மற்றொன்றையுஞ் சிந்தியார்கள். இதுபற்றியே தெய்வப்புலவரும்

"அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்—பொருட்செல்வம்
பூரியார் கண்ணுமுள."

என்றார். இன்னும் நாம் உற்றுநோக்குமிடத்து ஆதிகாலத்திலே அடியார்கள் தோன்றாதிருப்பின் சைவமதம் குன்றியிருக்கும். அவர்கள் மறுசமயங்களை வாதித்தும், கண்டித்தும், சைவசமயத்தைப் பரப்புவதற்கு அரும்பெரும் தொண்டுபுரிந்தார்கள். அதன்பயனால் சைவமக்களாகிய நாம் நற்பயனை அடைந்தோம் என்பதில் அடியார்களுடைய பெருமை எமக்கு நன்கு விளங்கும்.

[வைகாசி மீ உ ஆ]

10 திருவள்ளுவர்

உலகில் வாழும் தமிழ்மக்கள் செய்த நற்றவத்தின் பயனே கவே தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார் அவதரித்துள்ளா ரென்று கூறுதல் மிகையாகாது. நாயனாரின் பிதாவின் பெயர் பகவன். மாதாவின் பெயர்: ஆதி. அவர்களுக்கு ஒளவை, உப்பை, அதிகமான், உருவை, கபிலர், வள்ளியம்மை, திருவள்ளு வர் என ஏழு பிள்ளைகள் பிறந்தனர். தந்தையாராகிய பகவன் தன் மனைவியாகிய ஆதியை நோக்கிப் பிள்ளைகள் பிறந்தவுடன் பிறந்த அந்த இடத்திலேயே விட்டுவிட்டு வரும்படி கட்டளை யிட்டார். ஆதி அதனைக்கேட்டு வருத்தமுற்றனள். குழந்தைகள் ஒவ்வொருவரும் பிறந்தவுடன் பெருங் கருத்தமைந்த பாக்களைப் பாடினர். அதனைக் கண்ட தாயும் கணவனது கட்டளைப்படி, பிள்ளைகளைப் பிறந்த இடங்களிலேயே விட்டுச்சென்றனர்.

இங்ஙனம் தாய் தந்தையரைப் பிரிந்த பிள்ளைகள் எழுவரும் கடவுள் கிருபையால் ஒவ்வோர் இடத்தில் வளர்ந்தனர். அவர் களுள் இளையவராகிய திருவள்ளுவர் இலுப்பை மரத்தின் அடியிற் சென்று அங்கே மரத்தினின்றும் ஒழுகும் தேனையுட்கொண்டு வளருகையில் அங்குள்ள ஆலயத்தில் புத்திரப் பேற்றைக் குறித் துத் தவஞ்செய்த ஓர் வேளாளனுடைய மனைவிக்கு "இக்குழந் தையை நீ எடுத்துக்கொண்டுபோய்த் திருவள்ளுவர் என நாமஞ் சூட்டி வளர்ப்பாயாக!" என ஓர் அசரீரிவாக்கு கேட்டது. உடனே வேளாளனும் மனைவியும் மிகுந்த அன்புடன் அப் பாலனை எடுத்து வளர்த்து வந்தார்கள்.

எம் புலவர் சிகாமணி பாலிய வயதிலேயே சற்குணம் நிறைந் தவராக விளங்கினர். அவருக்கு ஐந்து வயதாயிருக்கும் போது வேளாளனுடைய உறவினர்கள் மரபறியாக் குழந்தையை ஏன் வளர்க்கிறீர்கள்? என்று அவமானமாகக் கூறினர்கள். அதனைச் செவியுற்ற திருவள்ளுவர் தம்மை வளர்ப்போர் உறவினர்களால் அவமானப்படுவதைச் சகியாது அவர்களை விட்டு நீங்கி வேறோரி டத்திற் போயிருந்து இடையிடையே அவர்களது இல்லத்திற் கும் சென்றுவந்தார். அதன்பின் சிலகாலம் ஓர் பனைமரத்தடி யில் வீற்றிருந்து பின், சித்தர்கள் தவஞ் செய்யுமிடத்தை அடைந்தார்.

இவ்விதம் சென்ற திருவள்ளுவர் மலையில் தவஞ்செய்யும் திருமூலர் ஆதியோருடன் தாமும் தவஞ்செய்துகொண்டிருந்தார்.

அங்ஙனம் இருந்துவரும் நாளில் சீதாண்டைமண்டலத்தில் ஓர் வேதாளம் பயிர்களையும் மனிதர்களையும் அழித்துவந்தது. அங்கே பயிர் செய்துவந்த வேளாளனொருவன் அவ்வேதாளத்தை அடக்குவோருக்கு அதிக திரவியமும் ஓர் ஊரும் பரிசளிப்பதாகப் பறை சாற்றுவித்தான். பலர் போய் முயற்சித்தும் அதை அடக்க முடியவில்லை. வேளாளன் மலையின்கண் வந்து தன் குறையைத் திருமூலருக்கு முறையிட, அவர் திருவள்ளுவருக்கு முறையிடும்படி சொல்லினர். வேளாளன் திருவள்ளுவரை வேண்ட அவர் பஞ்சாக்ஷரத்தை உச்சரித்து வேதாளத்தை அகற்றினர்.

மேற்கூறிய அற்புதத்தைக் கண்ட வேளாளன் திரவியத்தையும், ஊரையும், வாசுகியென்னும் பெண்ணையும் பெற்றுக் கொள்ளும்படி வேண்ட, அவர் திரவியமும் ஊரும் வேண்டாமென மறுத்து, உலகமக்களுக்கு இல்லறத்தை இனிது நடாத்திக் காட்டுவான் போன்று, பெண்ணை மாத்திரம் ஏற்பதாகவும் அவள் தான் கொடுக்கும் மண்ணை அழுதாக்கிப் படைக்க வேண்டும் என்றும் சொன்னர். அக்கணமே வாசுகி அவரால் கொடுக்கப்பட்ட மணலை அழுதாக்கிப் படைத்தனள். அதன்மேல் நாயனருக்கு விதிப்படி திருமணம் நடந்தேறியது. நாயனர் கிருகம் அமைத்துக்கொண்டு பாவமற்றதாகிய நெய்தற்றொழிலை மேற்கொண்டு அதனால் வரும் பணத்தைக்கொண்டு சீவித்துவந்தார்.

மேலானதாகிய நெய்தற்றொழிலை மேற்கொண்டு வரும் நாளில் ஏலேலசிங்கம் என்பவரிடம் நூல் வாங்கிவந்தார். அதனால் ஏலேலசிங்கர் நாயனரிடத்து அதிக பக்தியுள்ளவராக விளங்கினர். ஓர் தினம் வியாபாரச்சரக்குகள் ஏற்றிவந்த கப்பல் கரை தட்டிப் போனது. உடனே ஏலேலசிங்கர் நாயனருக்கு முறையிட அவர் வந்து தமது கரத்தாலே தொட்டு, எல்லோரையும் ''ஏலையர்', என்று சொல்லி இழுக்கும்படி சொன்னர். அவ்விதம் சொல்லி இழுத்தவுடன் கப்பல் சரியாக வந்தது. பின் ஓர் சமயம் சங்கப் புலவர்கள் செருக்குற்றமை கண்டு அழகானந்தர் முதலியோர் நாயனரை நோக்கி இகபர போகங்களுக்குச் சாதனமாயும், சுலபமாயும், உலகவிடயங்கள் யாவையும் அடக்கி ஓர் நூல் இயற்றுமாறு வேண்டினர். அதற்கிணைந்த நாயனர் முப்பாலைக் கொண்டதாயும், ஆயிரத்துமுன்னூற்றுமுப்பது குறட்பாக்களை உடையதாயும் உள்ள செந்தமிழ்நூலை இயற்றிச் சங்கத்திலே அரங்கேற்றிப் புலவர்களது கர்வத்தை அடக்கினர்.

16-7-54

சிவமயம்

கட்டுரைகள் வெளியான திகதிகள்

1. விளம்பி ஹ்ரு கார்த்திகை மீ உ 0 உ
2. 1 – 8 - 61
3. விரோதி ஹ்ரு பங்குனி மீ உ க உ
4. 22 - 8 - 52
5. விகாரி ஹ்ரு புங்குனி மீ க உ உ
6. 30 – 5 – 52
7. 4 - 5 -62
8. நந்தன ஹ்ரு ஐப்ப க உ உ
9. வைகாசி மீ உ எ உ
10. 16 - 7 - 54

234.8

234.8

[illegible]

உ

இசைக்கல்வி

பால்ர் ஞாஞ்ஞெதய சபையில்

இருபது ஆண்டுகளுக்கு மேலாக இசைக்கல்வி புகட்டப்பட்டு வருகின்றது. வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம் ஆகிய மூன்று பகுதிகளாக இசைக்கல்வி வகுப்புக்கள் தகுந்த ஆசிரியர்கள் மூலம் நடாத்தப்படுகின்றது. இக் கல்லூரியில் கல்வி பயின்ற மாணவர் பலர் இன்று இசை ஆசிரியர்களாகத் திகழ்கின்றனர். குறைந்த கட்டணத்தில் நிறைந்த இசையைப் பயில இசைக் கல்லூரி மாணவ மாணவியரை அழைக்கின்றது. சேரவிரும்புவோர் பாலர் ஞாஞ்ஞெதய சபை நிர்வாகத்துடன் தொடர்பு கொள்க.

எஸ். பி. கே. என்டர்பிறைசஸ், சுன்னாகம்.